# SUPPLEMENT TO THE BRAHMAVIDYA

# ப்ரப்மவித்தியா பத்திரிகையின்

## அநுபந்தம்

புத் ௰௧ ] சிதம்பம் ஏவிளம்பி ஞூ ஐப்பசிமீ ௨௪உக்கு 1897 ஞூ நவம்பர்மீ ௯௨ [இல ௰௨


### வைதீகசந்திரமௌலி

### மகாபாசுபதாஸ்திரபராவர்த்தனப்பிரயோகம்.

முன்தொடர்ச்சி

---

இனி 22-ம் இலக்க விஜயத்துவஜத்தில் தோன்றியவிஷயங்களைக் கவுனிப்பாம். அதில் முக்கியமாய் அத்யாச்சிரம பதார்த்தவிசாரமே எடுக்கப்பட்டது. அதுமுன் இருமுறை சிலப் பிரமாணங்களால் அவரால் தம்மனதுக்குத்தோன்றியபடி பொருட்படுத்தப்பட்டது. அதை அவ்விடத்தே தக்கபிரமாணங்களால் மறுத்தோம். மீண்டும் அதை எழுதிவருகிறார். ஆனாலும் அங்குசொல்லவேண்டியவைகளில்விடப்பட்டவற்றையே இங்கு எடுத்து விரித்து அவர் பிடிவாதத்தைமாற்றுவாம். அவர் எடுத்த பெருங்குற்றம் யாதெனில், ஸ்ரீ ஜகத்குருஸ்வாமிகள் சுவேதாசுவதர பாஷ்யத்தில் அத்யாச்சிரம சப்தத்துக்கு 'பரமஹம்ஸசன்னியாசி' எனப்பொருள் விரித்தார்கள். அது தவறு. அதற்கு ஏதோதான் காட்டின பிரமாணங்களால் அவைதிக காமிகாதிகளுள் உள்ள ஹௌத்ரிதீக்ஷையே பொருள் என்பதேயாம். இதை இவரெடுத்துக்காட்டிய பிரமாணபலத்தை யவலப்படுத்தினவிடத்தே கண்டு அப் பிரமாணங்கள் இவர் கூறியவழியில்அப்பிரமாணங்களே யென அறிஞர் துணிந்தறிவார். ஆயினும் இவர் எழுதியதற்கு ஒருவழியில் சமாதானஞ்சொல்லாது அதை யலக்ஷியம் செய்வது மரபன்றுதலாலும் அனேக சிவபக்த சிகாமணிகள் மனதில் ஸ்ரீலோககுருஸ்வாமிகளிடம் விபரீதவுணர்ச்சி யுண்டாகக் கூடாதாகையானும், மீண்டும் சிலவிஷயங்களை அதனை மறுக்கக்காட்டுவோம். இங்கு அத்யாச்சிரமசப்தார்த்தம் சந்நியாஸ மென்றும் அதற்குரியதருமமே விபூதி என்றும் அதனாற்றான் அது அத்தியாசிரமதருமமெனப்படும் என்றும், அதனாற்றான் சந்நியாஸிகள் அத்யாச்சிரமிகள் எனப்பட்டார் என்றம், இவ்வத்யாச்சிரம தருமம் எவ்வகையிலும் சைவாகமதீக்ஷை யாகாதென்றும் முறையே நிரூபிப்பாம்.

1. இவற்றில் அத்யாச்சிரம சப்தார்த்தம்ஸந்நியாசம்என்பது.

ஸ்ரீகைவல்ய உபநிடதத்தில் இரண்டு இடங்களிலும் சுவேதாசுவதர உபநிடதத்தில் ஓரிடத்தும் இப்பதம் உபயோகிக்கப்பட்டது. அவற்றுள் சுவேதாசுவதர உபநிடதம் அத்யாசிரம உபநிடதம் என்றும் குறிக்கப்பட்டதே. இவ்விடங்களின்றி இப்பதம்வேறு உபநிடதங்களில் காணேம். ஆயினும் இம்மூன்றிலும் எந்தச்சொல்லும் இவர்குறிக்கும் அவைதிக தீக்ஷையைக் குறித்ததாகாது. அது ஆகுபொருளாக ஒருவாறு சேர்க்கக்கூடியதாயினும் அச்சொல்லுக்குச் செம்பொருள் ஆகவேயாகாது. பாருங்கள்! இவர்கொண்டபடி புராணங்களில் ஏகதேசத்தில் தோன்றும் வெளிக்கருத்துக்கிசைந்தும் பஸ்மதாரணமே இதன் பொருளாயினும் இதையே விரதமாகக்கொண்ட ஸ்ரீபரமஹம்ஸரன்றி மற்றவர் அதன்பொருளாவது கௌணமே. வேதங்களில் அநேகமாக லக்ஷியார்த்த ஸ்வீகாரம் தோஷம் என்பதே ஸித்தாந்திகள் கருத்து. மேலும், அங்ஙனம் அத்யாச்சிரமம் என்பது திரிபுண்டரமாத்திரத்தைச் சொல்லினும் அது வைதிகமாகிய பஸ்மதாரணத்தைச் சொல்லுமேயன்றி அவைதிக தீக்ஷையைக் கூட சொல்லாது. அங்ஙனம் அச்சொல்லைக் கண்டபடி தொடர்ந்து பொருட்படுத்தி திருநீற்றிலிருந்து அதுடன் கூடிய கிரியையிலிறக்கி அதினின்று மெல்ல வவைதிக தீக்ஷையிற்புகுத்தி அவற்றுளும் ஞானவதியினின்று கிரியாவதியிற் றள்ளி அவ்விதப்பதம் அமைந்ததும் அமையாததுமான எல்லாவித்தைகளை 'தீக்ஷையைக் குறிக்கும்' என்று பொருள் கொள்ளுமிவர், பாஞ்சராத்திரிகளிடம் அகப்பட்டு வருந்துவார் என்பதிற்றடையில்லை. எங்ஙனம் எனில்,

க. 'அத்யாச்ரமிப்ய: பரமம் பவித்ரம் ப்ரோவாச ஸம்யகூஷிஸங்க ஜுஷ்டம்'

உ. (க) 'ஸமஸ்தபாப க்ஷயகாரிணீம்'

,, (வ) 'ஶ்ருதிமேகஹாநமேவாஸ'

,, (ஶ) 'உச்யதாம்விவாஹேண க்ருஷ்ணம ஸஹவா ஹாநா'

,, (வ) 'ஶ்ருதி மேஷ்ஹூத்ராஸிகாஸ்யுமே நாஹி ஶ்ருதா'

௩. (க) 'ஸூஷ்ஜாநமோநாசிவிவக்ந'

,, (வ) 'விமோஷா நடங்கல்வியமாணிவுமோவம்'

ச. 'தமிஷெணா:வாஜெ.வஷ்.ஸஷாவஸ்யூ.திஸூரய:'

ரு. 'தஷஸ்யவிூ-யஜெவிவாயொகஸ்யூா.'

(க) 'தாபமில்லாச் சரீரம் பெற்றவன் அபக்குவன். அதை (ப்ரம்மத்தை) பெறான்.

(உ) க. பூமியே=தேனுதரணியே—உலகதாரணி.

உ. மிருத்திகையே? என்பாவத்தைத்துலைத்திடு.

ந. நூறுகைகளுடன் வராகாவதாரம் எடுத்தவிஷ்ணுவால் நீஉத்தரணம் செய்யப்பட்டாய்.

ச. ஓமிருத்திகாய் நீபிரம்மதேவரால் கொடுக்கப்பட்டு காசியபரால் அபிமந்திரணம் செய்யப்பட்டாய்.

ந) க. இவன் பெயரை யறிந்து விவேகமடையுங்கள்.

உ. விஷ்ணுவின் வீரியங்களைப் பலமுறைசொன்னேன்.

(ச) அந்தவிஷ்ணுவின் பரமமானபதத்தை (பெயருடன் கூடிய திருமந்திரத்தை) சூரிகள் என்றும் காண்கிறார்கள்.

(ரு) அவனுக்குப்பிரியமானது (நிவேதனம்செய்யப்பட்டது) நீராயிருந்தாலும் அதையருந்துவேன்'

என்று வேதங்களில் உள்ளவசனங்களால் எங்களுக்குள்ள பஞ்சசம்ஸ்காரங்கள் எனப்படும்.

(தாவ:வுஜ்ஞஸ்யா நாஜெ.தெ்ாயாமஸ்வ.வஜ:)

என்று எடுக்கப்பட்ட தப்தசக்கிராங்கனம், வெண்டிருமண்காப்பு, தாஸ்ய நாமம், திருமந்திரம் என்னும் அஷ்டாக்ஷரம், பகவத்யாகம் என்னும் விஷ்ணுபூஜை இவைகள் சுத்தவைதிகங்களாம் என நாட்டும் பாஞ்சராத்திரிகளை எவ்வழியிலும் மறுக்கவாற்றலற்று விழிப்பார் என்பதிற் றடையில்லை. யாமோ விநியோகம் பிரகரணம் முதலியவற்றானும் மீமாஞ்சைவலியாலும் உபபிருங்கணங்களின் பலத்ாலும் அவற்றிற்குள்ள பொருளையே கொண்டு இவரினத்தாரால்தாந்திரிக பாஞ்சராத்திரிகள் சொல்லும் ஆகுபொருளாதிகளை மறுத்து அது வைதிகமாகாதென்பதற்கு வேண்டியவரை புராணஸ்மிருதி பிரமாணங்களைக் காட்டுவோம். இவருக்குமட்டும் அது யேன் கூடாது எனில், கேவலம் பஸ்மதிரிபுண்டரஸ்தோத்திரம் வேதத்தில் கண்டால் அது அவைதிகதீக்ஷைவரை வால் நீண்டு பொருட்படுத்தப்படும் ஸித்தாந்தமுடையார் இவராகவே தாபத்தைத் தோத்திரம் செய்யும் சொல் வைதிக தாபமாகிய தவத்தைச் சொல்லாது, தாந்திரிகச் சூட்டுக்கோல் கன்மதத்தை எட்டித்தாவிப்பிடிக்கத்தடை என்னை. மிருத்திகாஸ்தோத்திரம் கேவலம் பூமியைத்துதிசெய்யாமலும் வைதிகர் முகத்தில் மண்ணை வாரிப்போடாமலும் துலையுமா? ஸ்ரீ விஷ்ணுவின் பெயரைத்துதிக்கும் வசனங்கள் தான்.

ஸஜெஹா.ப்ராஹணஸ்யநாஜ|

வஜெஹு.க்ஷத்ரியஸ்ய|

வாலிதாஹ.வெஸ்யஸ்ய|

ஷாஸாஹ.ஸூஷஸ்ய|

'சன்மாவென்பதை இறுதியில் சேர்த்து அந்தணர்க்குப் பெயர் சேர்க்கவேண்டும். வன்மா வென்பதை அரசனுக்குச் சேர்க்கவேணடும். பாலிதவென்பதை செற்பதுவைசியனுக்கு. சூத்திரர்க்கு தாசாந்த நாமதேயம்' என்றுபோதாயனமகரிஷி திருவாய்மலர்ந்தருளினவாறு சூத்திரயோக்யதாஸ நாமதேயத்தை வைதிகவருண சிரேஷ்டருக்கும் சேர்க்காதுதான் போமோ? மேலும் விஷ்ணுவின் பதம் எனப்படும் பராசக்தி சொரூபத்தைத் தோத்திரம் செய்த மந்திரம்தான் ஏன் அவைதிகமான துவயம் சரமசுலோகமாதிகளைப் பொருளாகக்கொண்டு வைதிகரைத் தந்திரப்படுகுழியிற் றள்ளாது? மேலும், அனேகமாய்ஹரி நிவேதனத்தைப் புகழ்ந்தமந்திரந்தான் எவ்வாறு பாஞ்சராத்திரதேவாலயத்தில் பரமாவைதிக பாஞ்சராத்திரத்தால் பிரதிஷ்டிக்கப்பட்ட சன்னிதியில் பாஞ்சராத்திரிகளால் பரமபாகவதர் என்று புகழப்படும்? பிராம்மணாதி வருணவேற்றுமையின்றி காலதேச விவஸ்தை சிறிதும் பாராது விநியோகிக்கும் தத்யோத்ன உண்டைகட்டியைச் சொல்லாது எவ்வாறு துலைந்திடும். இப்படிக்குப் பலவவைதிகாநர்த்தம் பயக்கும் புதியசித்தாந்தத்தைக்கைக்கொள்வது விவேகிகளுக்கழகன்று; மற்று 'அத்யாசிரமம்' என்றசொல்லுக்குப் பிரகரணத்தால் 'சன்யாசம்' என்ற பொருளும் உபபிருங்கணத்தால் (அவர்களுக்குரிய) பஸ்மாதாரணமுமே பொருளன்றி ஏதோ சிறிதும் வைதிக சம்பந்தமற்ற அவைதிக தீக்ஷை பொருளாகாது. ஆதலாற்றான் கூர்மபுராணம்: அத்யாச்சிரமி என்பவன் சன்யாஸியே என வற்புறுத்தியது. அதுவருமாறு:—

கூர்மபுராணம் இரண்டாவது அத்யாயத்தில்

(க) ஸவெஷாஜெஸ்ஜாணா.து வெஷவியூ. ஸ்ருதிஷஸிதம்|

(உ) ப்ரஹ்வாயவகவஜாணொ நைஷ்கொப்ரஹ்கதுர:|

(ந) உஷாஸீநஸாயகஸ்ஷ்ரஹ்ஸொஷிவியொஜவெக|

(ச) (தாவஸஸாநூாவஸிகஸ்ஷ விவியொஹிவநாஸ்ஜீ|)

(ரு) (யகயொவிவிபா:வெ்ா தூ: வாஜெஷ்கவொமிநஸ|)

(க) எல்லாவாச்சிரமங்களுக்கும் இருபகுபாகெள் வேதங்களில் காணப்பட்டன,

(உ) பிரம்மசாரி: உபகுர்வாணன், நைஷ்டிகன் என்றும் இருவகைப்படும்.
(ங) உதாஸீனன் ஸாதகன் என்று இருவகைக்கிரகஸ்தன்.
(ச) (தாபஸன்) ஸாந்யாஸிகன் என வானப்பிரஸ்தன் இருவகை)
(ரு) (பாரமேஷ்டிகன் யோகி என இருவகை யதிகள்) என்று பிரித்து இருவகை ஸந்யாஸிகளுக்கு உட்பிரிவும் இலக்கணமும் சொல்லுமிடம்.

(க) 𑌜𑍍𑌞𑌾𑌨𑌾𑌯𑌵𑌰𑍍𑌤𑌤𑍇𑌭𑌿𑌕𑍍𑌷𑍁𑌃𑌪𑍍𑌰𑍋𑌚𑍍𑌯𑌤𑍇𑌪𑌾𑌰𑌮𑍇𑌷𑍍𑌠𑌿𑌕𑌃।

(உ) 𑌯𑌸𑍍𑌤𑍍𑌵𑌾𑌤𑍍𑌮𑌰𑌤𑌿𑌰𑍇𑌵𑌸𑍍𑌯𑌾𑌨𑍍𑌨𑌿𑌤𑍍𑌯𑌤𑍃𑌪𑍍𑌤𑍋𑌮𑌹𑌾𑌮𑍁𑌨𑌿𑌃।

(ங) 𑌸𑌮𑍍𑌯𑌗𑍍𑌦𑌰𑍍𑌶𑌨𑌸𑌂𑌪𑌨𑍍𑌨𑌃 𑌸𑌯𑍋𑌗𑍀𑌭𑌿𑌕𑍍𑌷𑍁𑌰𑍁𑌚𑍍𑌯𑌤𑍇।

(ச) 𑌜𑍍𑌞𑌾𑌨𑌸𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌨𑌃𑌕𑍇𑌚𑌿𑌦𑍍 𑌵𑍇𑌦𑌸𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌨𑍋𑌪𑌰𑍇।

(ரு) 𑌕𑌰𑍍𑌮𑌸𑌨𑍍𑌨𑍍𑌯𑌾𑌸𑌿𑌨𑌃𑌕𑍇𑌚𑌿𑌤𑍍𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑌾𑌃𑌪𑌾𑌰𑌮𑍇𑌷𑍍𑌠𑌿𑌕𑌾𑌃।

(சு) 𑌯𑍋𑌗𑍀𑌚𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌧𑍋𑌜𑍍𑌞𑍇𑌯𑍋 𑌭𑍌𑌤𑌿𑌕𑌸𑍍𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑌏𑌵𑌚।

(எ) 𑌤𑍃𑌤𑍀𑌯𑍋𑌤𑍍𑌯𑌾𑌶𑍍𑌰𑌮𑍀𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑍋𑌯𑍋𑌗𑌮𑍁𑌤𑍍𑌤𑌮𑌮𑌾𑌶𑍍𑌰𑌿𑌤𑌃।

(அ) 𑌪𑍍𑌰𑌥𑌮𑌾𑌭𑌾𑌵𑌨𑌾𑌪𑍂𑌰𑍍𑌵𑍇𑌸𑌾𑌂𑌖𑍍𑌯𑍇𑌤𑍍𑌵𑌕𑍍𑌷𑌰𑌭𑌾𑌵𑌨𑌾।

(கூ) 𑌤𑍃𑌤𑍀𑌯𑍇𑌚𑌾𑌂𑌤𑌿𑌮𑌾𑌪𑍍𑌰𑍋𑌕𑍍𑌤𑌾𑌭𑌾𑌵𑌨𑌾𑌪𑌾𑌰𑌮𑍇𑌶𑍍𑌵𑌰𑍀।

(ய) 𑌤𑌸𑍍𑌮𑌾𑌦𑍇𑌤𑌦𑍍𑌵𑌿𑌜𑌾𑌨𑍀𑌧𑍍𑌵 𑌮𑌾𑌶𑍍𑌰𑌮𑌾𑌣𑌾𑌂𑌚𑌤𑍁𑌷𑍍𑌟𑌯𑌂।

[க] 'எவன் ஞானத்துக்கே முயன்று வருவான் அவன் அவ்வகைச் சன்னியாசி, பரமேஷ்டிகன் எனப்படுவோன். (உ) எவன் நித்யதிருப்தனாய் சுவாத்தும நிஷ்டையுள்ள மகாமுனியாய் (ங) சாஸ்திரார்த்த நிச்சயமுடையவன் அவன் அத்தகைய ஸன்யாஸி, யோகி எனப்படுவோன். (ச) ஞானிசந்யாசிகள் சிலர்; வேதசன்யாசிகள் மற்றோர். (ரு) கன்மசன்யாசிகள் சிலர். இங்ஙனம் மூவ்வகையார் பாரமேஷ்டிகராம். (சு) யோகியும் மூவகைப்படுவோன் பௌதிகனும் ஸங்கியனுமாம். (எ) மூன்றாவது உத்தமயோகத்தைப்பற்றிய அத்யாச்சிரமியாம். (அ) முதல்பாவனே. முதலிலே (பூதங்களிலே) இரண்டாவது அக்ஷரத்தில் (அவ்யக்தத்தில்) (கூ) மூன்றாவதான சரமபாவனே பாரமேசுவரியாம்.

(ய) ஆயின் இவ்விதம் ஆசிரமங்கள் நான்கென வறியவேண்டும்' என்று நிரூபித்து, சன்னியாஸிகளுள் யோகி எனப்படும் பரமஹம்ஸனே பௌதிகசாங்கியாத்யாச்சிரமிகள் எனப் பகுக்கக்கப்பட்டமையால் அத்யாச்சிரமம் ஸந்யாஸமே என்பதும் அது அவர்க்குரிய பஸ்மஸ்னானாதிகளேயும் குறிக்கும் என்பதுமே நியாயமாம். அற்றேல் அவ்வித மகாயோகிகள் அனுஷ்டிக்கக்கூடிய பஸ்மதரணத்தைக் குறிப்பது போலவே, ஏன் ஆகமோக்த ஹௌத்திரியைக் குறிக்காதெனின், அற்றன்று. அந்த கூர்மபுராணம் அதே அத்தியாயத்தில்

𑌆𑌦𑍌𑌵𑍇𑌦𑌮𑌯𑍀𑌭𑍂𑌤𑌾𑌯𑌤𑌃𑌸𑌰𑍍𑌵𑌾𑌃𑌪𑍍𑌰𑌵𑍃𑌤𑍍𑌤𑌯𑌃।
𑌅𑌨𑍍𑌯𑌾𑌨𑌿𑌹𑌿𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌾𑌣𑌿 𑌭𑍁𑌵𑍍𑌯𑌸𑍍𑌮𑌿𑌂𑌯𑌾𑌨𑌿𑌕𑌾𑌨𑌿𑌚𑌿𑌤𑍍।
𑌨𑌤𑍇𑌷𑍁𑌰𑌮𑌤𑍇𑌧𑍀𑌰𑌃𑌪𑌾𑌷𑌣𑍍𑌡𑍀𑌤𑍇𑌨𑌜𑌾𑌯𑌤𑍇।
𑌵𑍇𑌦𑌾𑌰𑍍𑌥𑌵𑌿𑌤𑍍𑌤𑌮𑍈𑌃𑌕𑌾𑌰𑍍𑌯𑌂𑌯𑌤𑍍𑌸𑍍𑌮𑍃𑌤𑌂𑌮𑍁𑌨𑌿𑌭𑌿𑌃𑌪𑍁𑌰𑌾।
𑌸𑌜𑍍𑌞𑍇𑌯𑌃𑌪𑌰𑌮𑍋𑌧𑌰𑍍𑌮𑍋𑌨𑌾𑌨𑍍𑌯𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑍇𑌷𑍁𑌸𑌂𑌸𑍍𑌥𑌿𑌤𑌃।
𑌯𑌾𑌵𑍇𑌦𑌬𑌾𑌹𑍍𑌯𑌾𑌃𑌸𑍍𑌮𑍃𑌤𑌯𑌃𑌯𑌾𑌶𑍍𑌚𑌕𑌾𑌶𑍍𑌚𑌕𑍁𑌦𑍃𑌷𑍍𑌟𑌯𑌃।
𑌸𑌰𑍍𑌵𑌾𑌸𑍍𑌤𑌾𑌃𑌨𑌿𑌷𑍍𑌫𑌲𑌾𑌃𑌪𑍍𑌰𑍇𑌤𑍍𑌯𑌤𑌮𑍋𑌨𑌿𑌷𑍍𑌠𑌾𑌹𑌿𑌤𑌾𑌃𑌸𑍍𑌮𑍃𑌤𑌾𑌃।

ஆதியில் வேதமயியானவாக்குண்டாயது; அதனிடமே எல்லாப் பிரவர்த்திகளும். அஃதன்றி மற்றசாஸ்திரங்கள் உலகத்தில் பல வுண்டாயினும் அவற்றில் அறிவுள்ளவன் மனம் வைக்கமாட்டான். அவற்றால் ப்ரஷண்டியாவான். வேதார்த்தங்களேயறிந்த முனிவர்களால் எவை ஸ்மரிக்கப்பட்டனவோ அவைகளெல்லாம் பரம'தர்மங்களேயாகையால் அவை அனுஷ்டிக்கவேண்டினவையே. 'எவை வேதப்பாஹ்யங்களான ஸ்மிருதிகளோ, எவைதிதிருஷ்டிகளோ, அவை மறுமையில் நிஷ்பலங்களும் தமோமயநரகம் பயப்பனவுமாம்' என்று வேததர்மசாஸ்திரங்களில்லாத மற்றவை நிந்திக்கப்பட்டமையால் என்க.

இன்னும் வரும்.

# அத்வைதவிளக்கம்.

முன்தொடர்ச்சி.

என்றும்,

உரைத்தலால் வேதத்தைச் சூத்திரனுக்குச் சமமென்றும் வேதத்திற்குக் கீழ்ப்பட்ட பிரமாணமான சிவாகமத்தைப் பிராமணனுக்குச் சமமென்றுங் கூறி, வேத

**நிந்தைசெய்த இப்பூர்வபட்சியார்: பதினான்கு விந்தைகட் குட்பட்ட ஷை புராணத்தின் பிரமாணப்படி மாபாவியர் வகுப்பிலும் புலையர் வகுப்பிலும் சேர்கின்றனரேயென மிக விசனமுறுகின்றோம்!**

இன்னோரன்னர் கூற்றைக்குறித்தன்றோ
விஷ்ணுபுராணம் 6-ம் அம்சம் கலிதருமத்தில்.

இப்படியாக வருணாசிரம தருமங்கள் கெட்டு வேத மார்க்கமே யொளித்துப்போகப் பாஷண்டமதங்களைக் கைக்கொண்டு ஜனங்கள் நடப்பதினால் அதருமம் விருத்தியாவதுபற்றி ஆயுள் குறைந்துவிடும்..........எப்போது பாஷண்டர் விருத்தியாகின்றார்களோ, எப்போது வேதமார்க்கத்தை யனுசரித்த சற்புருஷருக்குத் தீங்குநேரிடுகின்றதோ, எப்போது தருமவான்களுடைய எதநனங் கெட்டுப்போகின்றதோ, அப்போது கலி முதிர்ந்து நிற்கிறதென்றறிந்துகொள்ளவேண்டும்..........எப்போது வேதஞ்சொல்லுகிற காரியங்களிலே பிரீதியில்லாமல் பாஷண்ட வாக்கியங்களிற் பிரீதியுண்டாகின்றதோ, அப்போது கலி மகாபலம் பொருந்தி யிருக்கின்றானென்றறியவேண்டும்.

என்று கூறியது?

'வேதம் சிவாகமத்துக் கடக்கமென்பது எதனால் விளங்கியது?' என்று அதவைதியார் வினவியதாக வரைந்து, பின்னர் அதற்குவிடை

தெளிதருமாகமவிதியிற்பதிட்டைசெய்யப்படுந்தெய்வ
ஒளிமிகுவைதிகன் பூசித்துறவணங்கத்தக்கதே
அளியுடையீரெப்போதுமமைதருபண்ணவரூபம்
விளிதலிலாச்சுத்தமாயிருப்பதன்றிவேறுளதோ.

என்னுஞ் சூதசங்கிதையால் விளங்கிய தறியக்கடவீர்' என்றார்.

'தெளிதரு மாகமவிதி' என்ற தலைப்பினையுடைய ஷை செய்யுள்: சூதசங்கிதை சூதகீதை சருவவேதார்த்த சங்கிரகமுரைத்த அத்தியாயம் 20-ம் எண்ணிலுள்ளது. அதி ஷை அத்தியாயம் 14-வது செய்யுளில் 'வைதிகர்க்கு வேத விதி மாண்பூசையல்லாது, சைதலிறந்திர விதியினற்பூசை கூடாது' என்றுகூறி, பின்னர் 20-வது செய்யுளில் ஆகம விதிப்படிப் பிரதிஷ்டைசெய்த தெய்வத்தை வைதிகன் பூசிப்பது தனதுயர்ந்த நிலைமைக்குத் தக்கதன்றாயினும் பண்ணவரூபம் (சிவரூபம்) சுத்தமானமையின், அது: அவைதிகர்களான ஆகமிகர்களால் பிரதிஷ்டை செய்யப்படுவதின் காரணமாக அசுத்தமாகாதாகலின், ஆகமவிதியிற் பிரதிஷ்டைசெய்யப்படும் தெய்வத்தை வைதிகன் பூசிக்கத் தக்கதே' என்னுங் கருத்துறத் 'தெளிதருமாகமவிதியிற் பதிட்டை செய்யப்படுந் தெய்வம், ஒளிமிகு வைதிகன் பூசித்துற வணங்கத்தக்கதே' என்ற கூறியதை யொட்டிப்பார்க்குந் திறமின்றி "வேதம் சிவாகமத்திற் கடக்கமென்பது எதனால் விளங்கியது' என்ற கேள்விக்கு 'தெளிதருமாகம விதியின் என்றசெய்யுளை விடையாகவெழுதி மருண்டாரென்க.

'ஞானியானவன் ஞானமுதல் நான்கினுக்கு முரியன். யோகியானவன் யோகமுதல் மூன்றினுக்கு முரியன். கிரியாவான் கிரியைமுதலிரண்டினுக்கு முரியன். சரியையாவான் அச்சரியை யொன்றினுக்கே யுரியன். இப்படியே ஆகமிகன் ஆகமத்தையும் வேதத்தையு மனுசரிப்பான். வைதிகன் வேதமொன்றினையே அனுசரிப்பான்' என்றார். இவர் 'வேதம் சிவாகமத்திற் கடக்கமென்று எந்நூலைப் பிரமாணமாகக் காட்டினாரோ, அந்நூல் அவ்வத்தியாயம் அதாவது சூதசங்கிதை சூதகீதை சருவவேதாந்த சங்கிரகமுரைத்த அத்தியாயத்தின்

இத்தகுவைதிகமார்க்கப்பிரவிர்த்தியில்லாருக்
கத்தனாரணத்தில்வன்னந்தருமமாச்சிரமநல
மொத்தபூசாதியெல்லாமுரைத்தபடியேபற்பல
சித்தநிலவாகமத்துஞ்செப்பியிருக்கின்றனனால். (௨௨)

இச் செய்யுளில் வைதிகமார்க்கப் பிரவிர்த்தியில்லாத அனதிகாரிகளுக்காக ஆகமஞ் சொல்லப்பட்டிருக்கிறதென்றும்,

ஆகமிகர் வைதிகர்க் கவ்வப்பூசையே தகுதி
யாகமிகர் வைதிகரைத் தொடுதலும் வைதிகரானோர்
ஆகமிகரைத் தொடுதலுங் கூடாதவிரரசன்
ஆகமிகன் வைதிகன் வேறாவிருக்கச் செயல்வேண்டும்.(21)

இச்செய்யுளில், ஆகமிகர்க்கும் வைதிகர்க்கும் அவரவர்க்குரிய பூசையே தகுதி (பிராமணன் சூத்திரனையும் சூத்திரன் பிராமணனையும் தொடாதிருப்பதுபோன்று) ஆகமிகரும் வைதிகரும் ஒருவர்க்கொருவர் தொடக்கூடாது. அரசன் அவ்விருவரையும் பிரித்து வைக்க வேண்டும் என்றும்,

22-வது 23-வது செய்யுட்களில், சிவனுக்கொப்பான தேவனும், சிவஞானத்திற்கொத்த ஞானமும், கங்கைக் கொப்பான நதியும், பஞ்சாக்கரத்துக் கொப்பான மந்திரமும், காசிக்கொப்பான நகரும், அன்னத்திற் கொப்பான வுணவும் எவ்வாறின்றோ, அவ்வாறே வைதிகர்கட் கொப்பானவரில்லையென்னும் பொருள்தருமாறுகூறி, பின்னர்

உலகினுக்கு வைதிகன் செங்கதிரோனை யொத்தெளிர்வான்
அலர்புகழ்மற்றவன் சிவன்போல் யாவரும் போற்றத்தக்கான்
மலமிலவன் மான்மியம் யான் சொல்லுதற்கு வல்லேனோ
பலமறைகள் மிருதிபுராணாதிகளே பகருமால்.